31st October 1962]

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஹொகனக்கல் திட்டம் சம்பந்தமாகத் தென் மண்டலக் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதா? விவாதிக்கப்பட்டிருந்தால், என்ன அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மண்டலக் கவுன்சிலில் இது விவாதிக்கப்படவில்லை. இதைப்பற்றிப் பூர்வாங்கமாக அதிகாரிகள் பேசவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில்தான் அதிகாரிகள் பேச ஆரம்பித்தார்கள். அதிகாரிகள் பேசும்போது, இவ்விதமாக நீர்ப் பாசனத் திட்டத்தையும் ஒப்பந்தத்தையும் இதில் இணைத்ததனல் பேச்சுவார்த்தையை நிறுத்திவிட்டோம்.

* *1010-பி.* கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹொகேனக்கல் அணைக்கட்டு சம்பந்தமாக சென்னை, மைசூர் அரசாங்கங்களின் உயர்தர அதிகாரிகள் பேச்சுவார்த்தை சமீபத்தில் நடைபெற்றதா?

(இ) எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது? அதன் முடிவென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(**b**) The matter is under negotiation.

* *1010-சி.* கேள்வி.—திரு. க. நாராயணசாமி பிள்ளை & எம். வி. கரிவேங்கடம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹொகேனக்கல் மின்சாரத் திட்டம் பற்றி நம் மாநில அரசாங்கமும் மைசூர் அரசாங்கமும் நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : No final decision has yet been reached in the matter.

காகித உற்பத்தித் தொழிற்சாலைகள்

* *1010-டி.* கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் எங்கெங்கு காகித உற்பத்தித் தொழிற்சாலைகள் இருக்கின்றன?

(இ) தனியார் துறையில் நடைபெறுவது எத்தனை?

(உ) புதிதாக எங்காவது ஏற்படுத்த உத்தேசமுண்டா?

[31st October 1962

THE HON. SRI R. VENKATARAMAN : (அ), (இ) & (உ) : At present there is no paper mill working in the State. But licences have been granted for the establishment of seven paper mills (including two paper and straw board mills) in the private sector in the following places :—

Paper Mill—

1. Pallipalayam (Salem district).
2. Mayanur village (Tiruchirappalli district).
3. Mudapadi village (Madurai district).
4. Ambasamudram (Tirunelveli district).
5. Vikramasingapuram (Tirunelveli district).

Paper and Straw Board—

6. Salem.
7. Bhavanisagar (Coimbatore district).

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் கூடலூர் தாலுகாவில் ஏராளமான மூங்கில் காடுகள் இருக்கின்றன. அங்கு காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்று அரசாங்கத்திற்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். எங்கள் பகுதி பிற்பட்ட நிலையில் இருப்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து, அங்கே அரசாங்கத் துறையில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது பற்றி ஆலோசிப்பாரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கூடலூர் பகுதியில் இருக்கிற எல்லா மூங்கிலும் சேலத்தில் பள்ளிப்பாளையத்தில் அமைக்கக் கூடிய தொழிற்சாலைக்கு முன்பே கொடுத்தாகி விட்டது. அதுவே அவர்களுக்குப் போதாது. அதற்கே இன்றைக்கு மூங்கில் பற்றாக்குறையாக இருக்கிறது.

கள்ள நோட்டுகள்

***1010-இ. கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962 ஆகஸ்டு மாதத்தில் கோவையில் பத்து ரூபாய் கள்ளநோட்டுகள் கைப்பற்றப்பட்டதா ?

(இ) அப்படியானால், மேலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The case is under investigation.

Currency Notes

*1010-F *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the Police have seized some currency notes bearing some political signs or slogans;